**ஆசியா அளவிலான பட்டறை :**
**IYAFA 2022-நிலைத்தத் தன்மையுள்ள, சரிநிகர் நிலையிலான மீன்பிடியைக் கொண்டாடுதல் (Celebrating Sustainable and Equitable Small-scale Fisheries)**

## அமர்வு 2: நிலைத்த தன்மையுள்ள மீன்பிடி, உணவுப் பாதுகாப்பு, வறுமை ஒழிப்புக்கான சமூக வளர்ச்சி

சிறுவீத மீன்பிடியில், மீனவ சமூகத்தின் ஒட்டுமொத்த நல்வாழ்க்கையைச் சுட்டுவதாக சமூக வளர்ச்சி இருக்கிறது. சமூக வளர்ச்சியை உறுதி செய்வதன் மூலம் நிலைத்த தன்மையுள்ள, பொறுப்பார்ந்த மீன்வள மேலாண்மையை எட்ட முடியும். சமூக வளர்ச்சியின் முக்கியமான அங்கமாக சமூகப் பாதுகாப்பு உள்ளது. இயற்கை பேரிடர்கள், மீன்பிடியில் ஏற்படும் நெருக்கடிகள், கோவிட் 19 போன்ற பெருந்தொற்றுகளின் காலங்களில் மிகவும் முக்கியமான பாதுகாப்புகளை வழங்குவதாகவும் சமூகப் பாதுகாப்பு உள்ளது. சமூகத்திலிருந்து விலக்கி வைப்பதை மிகக் குறைந்த ஒன்றாக ஆக்கிவிடும் சமூக வளர்ச்சி அணுகுமுறை, சிறுவீத மீன்பிடி மேலாண்மையில் உயிர்ச்சூழல் அணுகுமுறையை அமலாக்கம் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குகிறது. சரியான கொள்கை மற்றும் திட்டத்தின் பின்புலம் இருக்கும் என்றால், நிலைத்த தன்மையுள்ள மீன்பிடி தொழிலுக்கும், உணவுப் பாதுகாப்புக்கும், மீனவ சமூகத்தின் மத்தியில் வறுமையை ஒழிப்பதற்கும் பங்களிப்பு செய்வதாக அது அமையும்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்புக்காக நிலைத்த சிறுவீத மீன்பிடியைப் பாதுகாப்பதற்காக தன்னார்வ வழிகாட்டுதல்களில் ( SSF வழிகாட்டுதல்களில்) சமூக வளர்ச்சியின், பின்வருவன உட்பட பல்வேறு மூலக்கூறு அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன: (I) சுகாதாரம், கல்வி, எழுத்தறிவு, டிஜிட்டல் உலகுக்குள் விலக்கி வைக்காதிருப்பது போன்றவற்றை உருவாக்குவதும், அதனை அணுகுவதைச் சாத்தியமாக்குவதும்; வீட்டு வசதி, சுத்தம், குடிநீர், சக்தி ஆகியவை கிடைப்பது (ii) நீதி கிடைப்பதை உறுதி செய்வது (iii) கடலிலும், உள்நாட்டு நீர்ப்பரப்புகளிலும் பாதுகாப்பு கிடைப்பதும், பேரழிவு மேலாண்மைக்குக் கவனம் செலுத்துவதும் (iv) துணை துறைகளில் உள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் கௌரவமான வேலை அளிப்பது, மீன் பிடியில் மீனவ சமூகம் செலுத்தும் உழைப்புக்கு போதுமான கூலி கிடைக்கச் செய்வது,மீன்பிடியில் அவர்கள் இட்ட மூலதனத்துக்கும், அவர்கள்

மேற்கொள்ளும் மீன் வள நிர்வாகத்துக்கும் நியாயமான பலன் கிடைக்கச் செய்வது.

சமூக வளர்ச்சியில் உள்ளடங்கியிருக்கும் கௌரவமான வேலையின் அம்சங்கள் : (முறையான மற்றும் முறைசாரா துறைகளில்) பலன் தரும் வேலைவாய்ப்பு, சமூக உதவிகள் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புகளை அளித்தல். சமூகப் பாதுகாப்பு என்பதில் பின்வரும் அம்சங்கள் உள்ளடங்கியிருக்கும் : குழந்தைகள் மற்றும் குடும்பப் பலன்கள், வேலையில் ஏற்படும் காயத்துக்கான பலன்கள், சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) பரிந்துரைத்துள்ளபடி இறந்தவரைச் சார்ந்துள்ளவர்களுக்கு (survivor) உரிய பலன்கள். சிறுவீத மீன்பிடியில் உள்ளவர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு வேண்டும் என்று SSF வழிகாட்டுதல்கள் வலியுறுத்துகின்றன. (பத்தி 6.3).
கூடுதல் இலக்கான 14யைக் கவனத்தில் கொள்ளுவது நல்லது: பெருங்கடல்கள், கடல்கள், கடல் சார் வள ஆதாரங்களை நிலைத்த வளர்ச்சிக்காகப் பேணுவதையும் நிலைத்த வகையில் பயன்படுத்துவதையும் மேற்கொள்ளுங்கள். சமூக வளர்ச்சியின் பல்வேறு அம்சங்கள் நிலைத்த வளர்ச்சி இலக்குகளின் எல்லைக்குள்தான் இருக்கின்றன. அவற்றின் பின்வருவனவும் அடங்கும் : இலக்கு 1: வறுமையை அதன் அனைத்து வடிவங்களிலும் எல்லா இடங்களிலும் ஒழித்திடுங்கள். (தேசிய அளவிற்கு பொருத்தமான, அனைவருக்குமான சமூகப் பாதுகாப்பு கட்டமைப்பு, அனைவருக்குமான நடவடிக்கைகள் என்ற குறி (Target) 1.3யையும் இது உள்ளடக்கியதாகும் ; இலக்கு 2: பட்டினிக்கு முடிவு கட்டுங்கள், நிலைத்த விவசாயத்தை மேம்படுத்துங்கள் ; இலக்கு 3: அனைவரும் எல்லா வயதுப் பிரிவினரும் ஆரோக்கியமான நல்வாழ்க்கை வாழ்வதை உறுதி செய்யுங்கள் ; இலக்கு 4: யாரையும் விலக்கி வைக்காத, சரிநிகரான, தரமான கல்வியை உறுதி செய்யுங்கள், அனைவரும் வாழ்க்கை முழுவதிலும் கற்பதற்கான வாய்ப்பு அளித்தல் ; இலக்கு 5: பாலின் சமத்துவத்தை எட்டுங்கள். அனைத்து பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் அதிகாரம் அளியுங்கள் ; இலக்கு 8: நிலைத்தத் தன்மையுள்ள, அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை முன்னெடுங்கள், அனைவருக்கும் முழுமையான, பலன் தருகின்ற கௌரவமான வேலைகளை அளியுங்கள் ;இலக்கு 13: பருவநிலை மாற்றத்தையும் அதன் தாக்கங்களையும் எதிர்த்து நிற்பதற்கான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளுங்கள்.



#

**குழு விவாதத்துக்கான கேள்விகள்**

1. உங்களுடைய தேசிய அளவில் அல்லது உள்ளூர் மட்டத்தில் பெண்கள், ஆண்கள், சிறார்கள் உள்ளிட்ட சிறுவீத மீன்பிடியில் உள்ள அனைவருக்கும், செலவு சிக்கனமான, போதுமான சுகாதார சேவைகள், கல்விச் சேவைகள், வீட்டுவசதி, துப்புரவு, குடிநீர், சக்தி மற்றும் சேவைகள் மற்ற குடிமக்களோடு ஒப்பிடும் வகையில் கிடைக்கிறதா? இந்த வசதிகளையும் சேவைகளையும் எவ்வாறு மேம்படுத்தலாம்? மீனவ சமூக அமைப்புகளுக்கும் மீன்வள நிர்வாகத்துக்கும் என்ன பாத்திரம்?
2. துறை அளவிலும், தேசிய மட்டத்திலும், சிறு வீத மீன்பிடி சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் சமூக உதவி அல்லது சமூகக் காப்பீடு என்ற வடிவத்தில் சமூகப் பாதுகாப்பு கிடைக்கிறதா? பெண்கள், புலம்பெயர் தொழிலாளர்கள் போன்ற எந்தவொரு பிரிவுக்கும் இந்தத் திட்டங்களின் அமலாக்கத்தின்போது பாரபட்சம் காட்டப்படுகிறதா?

3. மீன்பிடி தொடர்பாக கடலில் அல்லது நன்னீர் நிலைகளில் அதிகரித்த அளவிலான விபத்துகள் ஏற்படுகின்றனவா? அதிதீவிர பருவநிலை நிகழ்வுகள், பருவநிலை மாற்றம் காரணமாக பெருங்கடல் சார் மற்றும் உள்நாட்டு மீன்பிடியில் பாதுகாப்பு பிரச்சனைகள் எழுந்துள்ளனவா? இந்த அச்சுறுத்தல்களின் மத்தியில் ஒட்டுமொத்த மீன்பிடி செயல்பாடுகளை எவ்வாறு மேம்படுத்துவது?



#